# பொதுக்காலம் 33ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றல்ல வாழப்பட வேண்டும்; செலவிடப்பட வேண்டும். கடவுள் நமக்கு அளிக்கின்ற கொடைகளை பயனுள்ளதாக்க இன்றைய நாளிலே பொதுக்காலம் முப்பத்து மூன்றாம் ஞாயிறு வழிபாட்டுக் கொண்டாட்டம் நம்மை அழைக்கின்றது.

இன்றைய முதல் வாசகத்திலே "எழில் ஏமாற்றும்; அழகு அற்றுப் போகும்" ஆனால் ஆண்டவரிடம் கொண்டுள்ள பெண்ணின் உழைப்பாலும், நற்செயலாலும் தனது கணவனின் நம்பிக்கையையும், மக்கள் மன்றத்தின் பாராட்டையும் பெறுகின்றாள் என்பதனை நீதிமொழிகள் நூல் எடுத்துரைக்கின்றது. நாமும் பிறரால் அறிந்து, தெரிந்து கொள்ளப்பட்ட நமது பங்களிப்பையும் இவ்வுலகிற்குத் தர வேண்டும்.

இரண்டாம் வாசகத்திலே மண்ணகத்திலிருந்து விண்ணகம் சென்ற கிறிஸ்து திரும்ப வருதல் எந்த நாளில் நிகழும் என தெரியாததால் ஒளியின் மக்களாகிய நாம் விழிப்போடும் அறிவுத் தெளிவோடும் தயாராக இருக்க புனித பவுலடியார் அறிவுறுத்துகின்றார்.

இன்றைய நற்செய்திப் பகுதியிலே தாலந்து உவமை வழியாக இறையாட்சியை சுதந்தரித்துக் கொள்ள பொறுப்போடும், பிறர் நலனுக்காகவும் செயல்பட வேண்டும் என இயேசு கூறுகின்றார்.

நமக்கு பாதகம் வந்து விடக்கூடாது; நாம் பிறரால் பாதிக்கப்படக்கூடாது. நம் வாழ்வை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றல்லாமல் நம் வாழ்வு பிறருக்கு உதவ இத்திருப்பலியிலே இறைவனை வேண்டி இறையாசீர் பெறுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கின்றவரே இறைவா!

நீர் ஒவ்வொருவருக்கும் ஏராளமான கொடைகளை கொடுத்துள்ளீர். அந்த கொடைகளை தான் மட்டும் அனுபவிக்காமல், மற்றவர்களுக்கும் கொடுத்து, பகிர்ந்து பயனடையவும், வாய்ப்பு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் எங்களது திறமைகளை வெளிப்படுத்திடவும் அதை வளர்த்துக் கொள்ளவும் உமது தூய ஆவியின் வல்லமையைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நம்பிக்கைக்குரிய பணியாளர்களை பெரிய பொறுப்புகளில் அமர்த்துகின்றவரே இறைவா!

வாழ்க்கை என்னும் கொடையை உம்மிடமிருந்து பெற்றுக் கொண்ட நாங்கள் பயனற்றப் பணியாளரைப் போல சோம்பேறித்தனத்தாலும், சுயநல வெறியாலும், ஈடுபாடின்மையாலும் வீணாக்காமல், முதல் இரண்டு பணியாளர்களைப் போல நம்பிக்கையுடனும் நன்றியுணர்வும் கொண்டவர்களாய் வாழ எங்களுக்குத் தேவையான அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. திறமைகளைப் பயன்படுத்த போதித்தவரே இறைவா!

நீர் எங்களுக்குக் கொடையாக தந்திருக்கின்ற பொருளாதார வளம், உடல் நலம், மனித வளம் இவைகளைப் பயன்படுத்தி, குடும்பம், சமூகம் மற்றும் திருச்சபை வளர்ச்சிக்காக உழைக்கின்ற ஆற்றலை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. திறமை வாய்ந்த மனையாளைப் பாராட்டுபவரே இறைவா!

குடும்பத்தலைவிகள் அனைவரையும் உமது ஞானத்தால் நிரப்பி, கண்ணியம் கட்டுப்பாடு இவற்றுடன் கூடிய நல்வாழ்வு வாழவும், தன்னம்பிக்கையும், இறை நம்பிக்கையும் கொண்டு குடும்பப் பொறுப்புகளை திறம்பட செய்யவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. ஒளியின் மக்களாக வாழ அழைப்பவரே இறைவா!

நாங்கள இருளுக்குரிய செயல்களான பகைமை, தன்னலம் போன்றவற்றைக் களைந்து ஒளிக்குரிய செயல்களான உண்மை, நேர்மையுடனே வாழ்ந்து, விழிப்போடும், அறிவுத் தெளிவோடும் வாழ்க்கையில் வருகின்ற சவால்களை துணிவுடன் சந்தித்து வெற்றி கொண்டு மகிழ்ச்சியினால் எங்கள் உள்ளத்தை நிரப்பிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. லூயிஸ் ரெக்ஸ்லின், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com